

# கிறிஸ்துவின் பிரதான தன்மை

**ஓய்வுநாள் பிற்பகல்**

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** ஆதி 1:26,27; கொலோ 1:13–19; யோவான் 1:1–3; எபே 1:22; 1கொரி 12:12–27; 4:9; ரோமர் 6:3, 4.

**மனன வசனம்:** அவர் (கிறிஸ்து) அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும்பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகலவஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது. கொலோசெயர் 1:15–17.

பாடம் 1,2இல் தொடங்கிய கொலோசெயர் நிருபத்தின் ஆராய்ச்சியை இந்த வாரத்திலிருந்து தொடருவோம். விசுவாசிகள் தேவனுக்குப் பிரியமாக வாழ வேண்டுமென்று பவுல் ஜெபித்ததாக 2ம் பாடம் வியாழக்கிழமையில் பார்த்தோம். கொலோ 1:9-12. இரண்டு பகுதிகளை வேறுபடுத்திக் காட்டுகிறார்: ஒளியும் இருளும்; 'ஒளியின் அரசு' கொலோ 1:12, சமகால மொழிபெயர்ப்பு. 'இருளின் அதிகாரம்' கொலோ 1:13. ஒளி ராஜ்யத்தின் நித்திய சுதந்தரத்தில் நாம் பங்கெடுப்பதற்கு தேவன் நம்மைத் தகுதிப்படுத்தியிருக்கிறார். இருளின் அதிகாரத்திலிருந்து விடுவித்திருக்கிறார். 'தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தி(யிருக்கிறார்). அவருக்குள், பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது.' கொலோ 1:13,14. நம் சிருஷ்டிகரும் தேவனுமான இயேசுவில், அவருக்குள்தாம் நமக்கு மீட்பு உண்டாயிருக்கிறது. அவரே நம் மீட்புக்கானவற்றைச் செய்தார்; அவரில் விசுவாசம் வைப்பதால், நாம் இருளின் ராஜ்யத்திலிருந்து அவருடைய பிரியமான குமாரனுடைய ராஜ்யத்திற்குள் கொண்டுசெல்லப்படுகிறோம்.

இயேசுகிறிஸ்துவைப்பற்றி புதிய ஏற்பாட்டு சொல்கிற விலாவாரியானதும் நுணுக்கமானதுமான அறிக்கைகளில் ஒன்றை இந்த வாரம் பார்ப்போம். இயேசு 'அதரிசனமான தேவனுடைய தற்சுரூபம்', 'சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறான 0வர்' என்றால் என்ன அர்த்தம்?

***2026, பெப்ரவரி 21 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்***

# அதரிசனமான தேவனின் தற்சுரூபம்

கண்ணாடியிலோ புகைப்படத்திலோ நம்மைப் பார்க்கும்போது, தட்டையான, இருபரிமாண உருவம் தெரியும். ஒரு சிலையில், அதைவிட தெளிவான சில அம்சங்களைக் காணலாம்; ஆனாலும் உயிருள்ள, சுவாசிக்கிற ஒரு மனிதனுக்கு இணையாக வரமுடியாது. தற்சுரூபம் அல்லது சாயல் என்கிற வேதாகமக் கருத்தில், எல்லா அம்சங்களும் பிரதிபலிக்காவிட்டாலும், விசாலமான அர்த்தங்கள் அடங்கியிருப்பது தெரிகிறது.

**ஆதி 1:26, 27; 5:3; 1கொரி 15:49; 2கொரி 3:18; எபி 10:1 ஆகிய வசனங்களில் 'சாயல்', 'நிழல்' ஆகிய வார்த்தைகள் எந்தெந்த அர்த்தங்களில் வருகிறதென சுருக்கமாக எழுதுங்கள். இயேசு தேவனுடைய சாயல் என்பதின் அர்த்தமும், நீங்கள் எழுதியுள்ள விபரங்களும் எவ்வாறெல்லாம் வித்தியாசப்படுகின்றன?**

சரீரம், ஆவிக்குரியதன்மை, உறவு, செயல்பாடு ஆகியவற்றில் தேவனைப்போல இருப்பதற்கே மனிதர்கள் சிருஷ்டிக்கப்பட்டார்கள். ஆனாலும் ஒருசில அம்சங்களில்மட்டுமே தேவ சாயலைப் பிரதிபலிக்கிறார்கள். அதையும் கூட பாவம் பாதித்திருக்கிறது. ஆனால் அதரிசனமான தேவனை நாம் 'காண்பதற்கு' இயேசு திறனளிக்கிறார். 'என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான்' என்று இயேசு சொன்னார். யோவான் 14:9. அவர் தேவனுடைய தன்மையை 'முழுவதுமாக வெளிக்காட்டும் உருவம்' எபி 1:3, எளிய மொழிபெயர்ப்பு. அவர் தேவனுடைய எண்ணத்தைக் கேட்கவும், அவரது குணத்தைப் பார்க்கவும் உதவுகிறார்.

**இயேசு ஏன் தனித்துவமான வகையில் பிதாவை வெளிப்படுத்த முடிகிறது? மத் 11:27; யோவான் 1:1,2,14,18.**

பிதாவாகிய தேவனுக்கும் தமக்கும் இடையே உள்ள உறவை வேறு சில வழிகளிலும் இயேசு சொல்லியிருக்கிறார்:

- 'என் பிதா இதுவரைக்கும் கிரியைசெய்துவருகிறார், நானும் கிரியைசெய்துவருகிறேன்.' யோவான் 5:17.
- 'நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம்.' யோவான் 10:30.
- 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.'

இயேசு தம்மை தேவ நாமத்தின் அடிப்படையிலும் விவரித்திருக்கிறார்: 'இருக்கிறவராக இருக்கிறேன்.' யாத் 3:14; 'ஜீவ அப்பம் நானே.' யோவான் 6:35; 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்.' யோவான் 8:12; 'நானே நல்ல மேய்ப்பன்.' யோவான் 10:11,14; 'நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்.' யோவான் 11:25; 'நான் பிதாவிலும் பிதா என்னிலும் இருக்கிறோம்.' யோவான் 14:11; 'ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்.' யோவான் 8:58.

---

**இயேசு தேவனாகமட்டும் இல்லாதிருந்தால், சிருஷ்டிக்கப்பட்ட ஒரு சிருஷ்டியை நமக்காக மரிக்கும்படி தேவன் அனுப்பினார் என்றுதானே அர்த்தமாகும்? கிறிஸ்து என்கிற நபரில் தேவன்தாமே நமக்காக மரித்தார் என்பது அவர் தேவன் என்பதை எவ்வாறு காட்டுகிறது?**

# சகல சிருஷ்டிக்கும் முந்தின பேரானவர்

புதிய ஏற்பாட்டில் 'முதற்பேறானவர்,' 'முதற்பிறந்தவர்' ஆகிய வார்த்தைகள் இயேசுவைச் சுட்டிக்காட்டுகின்றன. லூக் 2:7; ரோமர் 8:29; எபி 1:6; வெளி 1:5; கொலோசெயர் நிருபத்தில் இரண்டு இடங்களில் வாசிக்கிறோம். வேறு இடங்களில் அந்த வார்த்தைகள் வந்தாலும், காலவரிசைப்படி முதலில் பிறந்ததை அவை சுட்டிக்காட்டுவதில்லை. 'முதற்பேறானவர்' என்கிற வேதாகமக் கருத்து, பிறப்பு வரிசையை அல்ல, ஒரு தகப்பனுக்கும் மகனுக்கும் இடையே காணப்படுகிற விசேஷித்த உறவை வலியுறுத்துகிறது. இளைய மகன்களும்கூட முக்கியமானவர்களாக இருந்திருக்கிறார்கள்: ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு போன்றவர்கள்.

எட்டு குமாரர்களில் இளையவராக இருந்தாலும், தாவீதுதான் ராஜாவாக அபிஷேகம்பண்ணப்பட்டார். 1சாமு 16:10-13. தேவன் அவரை 'நான் அவனை எனக்கு முதற்பேறானவனும், பூமியின் ராஜாக்களைப்பார்க்கிலும் மகா உயர்ந்தவனுமாக்குவேன்' என்று சொன்னார். சங் 89:27. மேலும் மோசேயிடம், 'இஸ்ரவேல் என் சேஷ்டபுத்திரன்' என்று சொன்னார். யாத் 4:22. இவ்வகையில், முக்கியத்துவமிக்க நிலையைத்தான் அந்த வார்த்தை குறிக்கிறது.

**'சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர்' என்று இயேசு அழைக்கப்படுவதற்கு பவுல் சொல்கிற காரணங்கள் என்ன? கொலோ 1:15-17.**

இயேசுவே முதன்முதலாகச் சிருஷ்டிக்கப்பட்டவர் என்கிற அர்த்தத்தில் பவுல் பேசவில்லை. அவ்வாறு யோசிப்பதற்கு அவர் வாய்ப்பே கொடுக்கவில்லை. இயேசுவே சகலத்தையும் சிருஷ்டித்தவர் என்று இரண்டு முறை, இரண்டு வெவ்வேறு வழிகளில், கூறுகிறார். சகலமும் அவரைக்கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது என்கிறார். கொலோ 1:16. இரண்டிலுமே இயேசுவை விசேஷித்த ஏதுகரமாகக் கொண்டு சிருஷ்டிப்பின் செயல்முறையை தேவன் நிறைவேற்றியது காட்டப்பட்டுள்ளது. எபே 3:9; யோவான் 1:1-3; வெளி 4:11.

முடிந்த அளவுக்கு தெளிவுப்படுத்துகிற வகையில் பவுல் பேசுகிறார். சகலமும் என்றால் சகலமும் அடங்கும். இடம் (பரலோகம், பூலோகம்), இருப்பவை (காணப்படுகிறவைகள், காணப்படாதவைகள்), செயல்படுபவை (சிங்காசனங்கள், கர்த்தத்துவங்கள், துரைத்தனங்கள், அதிகாரங்கள்) என அனைத்தும். கடைசியாக வருகிற வார்த்தைகள் தூதர்களைச் சுட்டிக்காட்டுபவை. எபே 3:10; 6:12. தான் சொல்வதை தவறாகப் புரிந்துகொள்ளாமலிருக்க இயேசு 'எல்லாவற்றிற்கும் முந்தினவர்' என்றும் சொல்கிறார். கொலோ 1:17. இதற்கான கிரேக்க சொற்றொடரின் அர்த்தம் அந்தஸ்திலும் காலத்திலும் முந்தினவர் என்பதாகும்; பவுலின் எழுத்துகளில் மற்ற இடங்களில் இது காலத்தில் முந்தினவர் என்பதைக் குறிக்கிறது. 1கொரி 2:7; கலா 1:17; எபே 1:4. இயேசு முந்தினவர் என்பதற்கு பவுல் சொல்கிற இன்னொரு காரணம், 'எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது.' கொலோ 1:17. நிலைநிற்பது என்பதற்கான கிரேக்க வார்த்தை **ஸினிஸ்டெமி.** அதற்கு, 'ஒன்றாகச் சேர்க்கப்படுவது' அல்லது 'இணைக்கப்படுவது' என்று அர்த்தம். இயேசுவே பிரபஞ்சத்தை ஒருங் கிணைக்கிற காரணி; அவர் சிருஷ்டிகர் என்பதால் அல்ல, மீட்பர் என்பதால் அது சாத்தியமாகிறது.

---

**சிருஷ்டிகராகிய தேவன் நமக்காக மரித்தார். அத்துடன் நம்முடைய கிரியைகள் ஏதாவது சேர்க்கமுடியுமா? கிறிஸ்து செய்தவற்றுடன் நம் கிரியைகளும் ஏதாவது சேர்க்கமுடியும் என நினைப்பது ஏன் தேவதூஷணம்?**

# சரீரத்தின் (திருச்சபையின்) தலை

**எபே 1:23; கொலோ 2:10 ஆகிய வசனங்களில் 'தலை' என்பதின் அர்த்தம் என்ன? இயேசுவை 'சபைக்குத் தலை' என்று பவுல் சொல்வதின் அர்த்தம் என்ன? எபே 5:23.**

---

---

உலகம் முழுவதிலும், எந்த மொழியாக இருந்தாலும், தலைமைப்பதவியில் இருப்பவர்களை 'தலை' என்று உருவகமாகப் பேசுவது இயல்பு. பழைய, புதிய ஏற்பாடுகளில் பல இடங்களில் அதேபோல் வருகிறது. பின்வரும் வசனங்களில் 'தலை' என்பது வருகிற விதத்தைக் கவனியுங்கள்:

1. யாத் 18:25 - 'மோசே இஸ்ரவேலர் எல்லாரிலும் திறமையுள்ள மனிதரைத் தெரிந்துகொண்டு, அவர்களை ஆயிரம்பேருக்கு அதிபதிகளாகவும், நூறு பேருக்கு அதிபதிகளாகவும், ஐம்பதுபேருக்கு அதிபதிகளாகவும், பத்துப் பேருக்கு அதிபதிகளாகவும் ஜனங்கள்மேல் தலைவராக்கினான்.'
2. எண் 31:26 - 'சபையினுடைய பிதாக்களாகிய தலைவர்.'
3. உபா 28:14 - இஸ்ரவேலர் கீழ்ப்படிந்தால், தேவன் அவர்களை 'வாலாக்காமல் தலையாக்குவார்.'
4. ஏசா 7:8 - 'சீரியாவின் தலை தமஸ்கு, தமஸ்குவின் தலை ரேத்சீன்.'
5. ஓசியா 1:11 - 'யூதாவின் மக்களும், இஸ்ரயேல் மக்களும் தங்களுக்கு ஒரே தலைவனை நியமிப்பார்கள்.' சமகால மொழிபெயர்ப்பு.
6. மீகா 3:9 - 'யாக்கோபு குடும்பத்தின் தலைவர்களே, இஸ்ரயேல் குடும்பத்தின் ஆளுநர்களே.' சமகால மொழிபெயர்ப்பு.
7. 1கொரி 11:3 - 'ஒவ்வொரு புருஷனுக்கும் கிறிஸ்து தலையாயிருக்கிறார்.'

எனவே, சபையின் தலைவராகிய கிறிஸ்துவானவர் சபையின் ஒற்றுமைக்கும் வளர்ச்சிக்கும் தேவையான தலைமைத்துவத்தையும், வழிகாட்டலையும், போஷாக்கையும் அருளுகிறார். கொலோ 2:18.

**1கொரி 12:12-27இலும் சபையை ஒரு 'சரீரமாக' பவுல் விவரிக்கிறார். இந்த உருவகத்தில் சபையின் வேறு என்ன அம்சங்கள் உள்ளன?**

---

---

தலையில்லாமல் சரீரத்தால் வாழமுடியாததுபோல, சரீரத்தின் ஏதாவது பகுதி இல்லாமல் போனாலும் வாழ்வது கடினம். ஒன்றை இழக்கும்வரை அது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் உணருவதில்லை.

---

**'கை வேண்டுமா? கண் வேண்டுமா?' என்று தீர்மானிக்கச் சொன்னால் என்ன தேர்ந்தெடுப்பீர்கள்? திருச்சபையின் அங்கத்தினர்களில் ஒவ்வொருவரும் முக்கியம் என்பதுபற்றி இது சொல்வது என்ன?**

---

# ‘ஆதியுமானவர்’ (துவக்கமானவர்)

**கிறிஸ்துவே தலை, அவரே ‘ஆதி’ என்கிற கருத்துக்கு இடையிலுள்ள தொடர்பு என்ன? கொலோ 1:18.**

தலை **(ரோஸ்)**, ஆதி **(ரெஸிட்)** ஆகிய எபிரெய வார்த்தைகள் தொடர்புடையவை. ஆதி என்கிற வார்த்தை வேதாகமத்தில் முதன்முதலாக ஆதி 1:1 இல் வருகிறது: ‘ஆதியில் (ரெஸிட்) தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.’ இயேசுவே மனுகுலத்திற்கும் சபைக்கும் தலையானவர், அவர் மனிதனாக வந்ததால் மட்டுமல்ல, சிருஷ்டிகராகவும் இருப்பதால் தலையாக இருக்கிறார்.

ஆதி என்பதற்கான **ஆர்ச்** எனும் கிரேக்க வார்த்தை விசாலமான அர்த்தம் அடங்கியது. இங்கு, ‘ஆதி’ என்பது இயேசு சிருஷ்டிப்பின் ‘ஆதியாக’ அல்லது தொடக்கமாக இருப்பதுபோல அவரே திருச்சபையின் ஆதாரம் அல்லது தொடக்கம் என்று குறிப்பிடுகிறது. கொலோ 1:18.

இயேசு சிருஷ்டிப்பையும் திருச்சபையையும் தொடங்கினவர் மட்டுமல்ல; மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததால், புதுச் சிருஷ்டிப்பைத் தொடங்கினவராகவும் இருக்கிறார். ரோம 6:3. பாவத்தின் சம்பளம் மரணம். அவர் மரணத்தை வென்றதால், பாவத்தை ஜெயித்தார். தம் சாயலில் நம்மை புதிதாகச் சிருஷ்டிப்பதற்கு வல்லமை பெற்றிருக்கிறார். அவர் ‘மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறாக’ இருப்பதின் அர்த்தம்பற்றி இவை எடுத்துக்காட்டுகின்றன. ‘முதற்பேறு’ என்பதின் அர்த்தத்தை அறிய திங்கட்கிழமை பாடத்தைப் பார்க்கவும். அவரது உயிர்த்தெழுதல் முதல் சம்பவம் அல்ல என்றாலும், அது ஒப்புயர்வற்றது (மோசேதான் முதன்முதலாக உயிர்த்தெழுந்தவர், அவரது சரீரத்தைக்குறித்து சாத்தான் வாக்குவாதம் செய்ததிலிருந்து புரிகிறது (யூதா 9). ஆனால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாமல் ஒருவர்கூட மரணத்திலிருந்து உயிரோடு எழுந்திருக்கமுடியாது.

இயேசு ஒப்புயர்வற்றவர் என்பதற்கு பவுல் சொல்கிற காரணங்களைத் திருப்பிப்பார்ப்பது நல்லது:

1. அவரே அதரிசனமான தேவனுடைய பூரண வெளிப்பாடாக இருக்கிறார்.
2. அவரை ஏதுகரமாகக் கொண்டே சகலமும் சிருஷ்டிக்கப்பட்டன.
3. அவர் சகலத்திற்கும் முன்னரே இருக்கிறவர், சகலமும் அவருக்குள் ஒன்றிணைக்கப்படுகிறது.
4. அவரே தமது சரீரமாகிய திருச்சபைக்கு தலையாக இருக்கிறார்.
5. அவரே சிருஷ்டிப்பையும் மறுச்சிருஷ்டிப்பையும் தொடங்குகிறவர்.
6. அவர் பாவத்தையும் மரணத்தையும் மேற்கொண்டார், அதன்மூலம் தம்மை இரட்சகராக விசுவாசிக்கிற அனைவரையும் உயிர்த்தெழச் செய்வதற்கான உரிமையைப் பெற்றார்.
7. இயேசு எல்லாக் காலங்களிலும் இருக்கிறவர், இவை அனைத்தின் அடிப்படையில், மனுக்குலத்தின் தலையாகவும் திருச்சபையின் தலையாகவும் இருப்பதற்கான தகுதியைப் பெற்றிருக்கிறார்.

---

**உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்துவின் ஒப்புயர்வற்ற தன்மையை அனுவபிப்பதற்கு நீங்கள் என்ன மாற்றம் செய்யவேண்டியுள்ளது?**

# சகலத்தையும் ஒப்புரவாக்கிக்கொள்ள

**சிலுவையின்மூலம் உண்டாகிற ஒப்புரவாகுதல் என்ன? அது எவ்வளவுக்கு விசாலமானது? கொலோ 1:19,20.**

இயேசுவை விவரிக்கிற உச்சக்கட்ட வார்த்தைகளை பவுல் இங்கு பயன்படுத்துகிறார், கொலோ 1:12இல் பிதாவைக் குறிப்பிடுகிற வார்த்தைகள் அவை. பிதாவின் பரிபூரணமெல்லாம் இயேசுவில் வாசம்பண்ணினதால் பிதா மகிழ்ச்சியடைந்தார். கொலோ 2:9. இந்த 'பரிபூரணம்' என்ன? அது 'கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்த' பிதாவின் மகிமை என்று யோவான் 1:14 சொல்கிறது.

இந்த வசனங்களின் அடிப்படையில், 'பரிபூரணம்' என்பதில் பல விஷயங்கள் அடங்கியுள்ளன. தேவனுடைய நித்தியதன்மையும், தம்மில்தாமாகவே இருக்கிறதன்மையும், சிருஷ்டிப்புக்கும் மறுசிருஷ்டிப்புக்குமான வல்லமையைப் பெற்றிருக்கிற தன்மையும் அடங்கும். முக்கியமாக, சிலுவையின்மூலமாக பாவத்தையும் மரணத்தையும் வெற்றிகொள்வதில் அவருக்கிருந்த ஞானத்தையும் வலியுறுத்திக் காட்டுகிறது. இது எவரும் கற்பனைகூட பண்ணிப்பார்க்க முடியாத ஒன்று. மிகவும் அவமானமான பொருளாகிய சிலுவையை எல்லா ஜீவிகளுக்கும் தம் நித்திய அன்பைக் காட்டுகிற ஒரு சாட்சியாக மாற்றினார். 'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.' யோவான் 3:16.

பாவம் நிரந்தரமாக தோற்கடிக்கப்படவும், ஒப்புரவாக்கப்படக்கூடிய அனைத்தும் ஒப்புரவாக்கப்படவும் உள்ள ஒரே வழி அந்த மகிமையான சத்தியத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டுள்ளது: தேவன் அன்புகூர்ந்தார் என்பதே அது. நம்மை இரட்சிப்பதற்கு கிறிஸ்துவை சிலுவையில் மரிக்க அனுப்பியதின் நிமித்தம் அனைத்தையுமே கொடுக்குமளவிற்கு அவர் நம்மையும் பிரபஞ்சத்தையும் நேசிக்கிறார். 'உலகம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை **காஸ்மோஸ்.** இது முழுப் பிரபஞ்சத்தையும் சுட்டிக்காட்டுகிறது. கிறிஸ்துவைப் பின்பற்றுவது பிரபஞ்சம் முழுவதும் தாக்கத்தை ஏற்படுத்துகிற ஒன்றென்று பவுல் குறிப்பிடுகிறார்: 'நாங்கள் உலகத்துக்கும் (காஸ்மோஸ், பிரபஞ்சம்) தூதருக்கும் மனுஷருக்கும் வேடிக்கையானோம்.' 1கொரி 4:9.

'கிறிஸ்து சிலுவையில் தொங்கியதை பரலோகம் துக்கத்தோடும் பிரமிப்போடும் பார்த்தது. சாத்தானும் அவனுடன் இணைந்த அனைவரும், தேவ பிரசன்னம் பட்சிக்கிற அக்கினியாக தங்களுக்கு விளங்குமளவிற்கு கலக வாழ்க்கையால் அவருக்கு இசைவற்றவர்களானார்கள். அன்பாகவே இருக்கிறவரின் மகிமை அவர்களை அழிக்கும். மாபெரும் போராட்டத்தின் துவக்கத்தில், தூதர்கள் இதைப் புரிந்திருக்கவில்லை. ஆனால் மாபெரும் போராட்டம் முடியும்போது அப்படி இருக்காது. அப்போது, மீட்பின் திட்டம் முடிந்திருக்கும். சிருஷ்டிக்கப்பட்ட அனைத்து அறிவுஜீவிகளுக்கும் தேவனுடைய குணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கும். 'அப்போது, தூதர்கள் இரட்சகருடைய சிலுவையைப் பார்க்கும்போது களிகூருவார்கள். கல்வாரிமீது செலுத்தப்பட்ட பலியின் விளைவுகளை கிறிஸ்து தாமே முற்றிலுமாக அறிந்திருந்தார். இவை அனைத்தும் நடக்குமென்று எதிர்பார்த்தவராகவே சிலுவையின்மீதிருந்து முடிந்தது என்று சொன்னார்.'

# மேலும் படிக்க:

ஒருவன் வெறும் மனிதனாக இருந்து, இயேசு பேசின விஷயங்களைப் பேசியிருந்தால், அவன் பெரிய ஒழுக்கப் போதனையாளனாக இருந்திருக்கமுடியாது. ஒன்று புத்திபிசகின வனாக இருப்பான்; அதாவது அரைவேக்காடாக இருப்பான். அல்லது நரகத்தின் பிசாசாக இருப்பான். நீங்கள்தான் தீர்மானிக்கவேண்டும். ஒன்று அவரை ஒரு மனிதராக, தேவகுமார னாகப் பார்க்கவேண்டும் அல்லது புத்திபிசகினவராகவோ, அதைவிட மோசமானவராகவோ பார்க்கவேண்டும். அவரை ஒரு மூடர் என்று சொல்லி ஒதுக்கலாம்; அவர்மீது துப்பலாம்; ஒரு பிசாசென்று சொல்லிக் கொல்லலாம். அல்லது, அவரது பாதத்தில் விழுந்து கர்த்தரென்றும் தேவனென்றும் சொல்லலாம். ஆனால் அவரை ஒரு மகத்தான மனித ஆசிரியர் என்று கருத்துகூறுகிற முட்டாள்தனத்திற்குமட்டும் வந்துவிடக்கூடாது. நம் இஷ்டத்திற்கு கருத்து கூற அவர் விடவில்லை. அது அவர் நோக்கமும் அல்ல.'

'தேவத்துவத்தின் பரிபூரணம் அனைத்தையும் சரீரத்தில் பெற்றிருப்பவர் பிதா, அவர் மனித கண்களுக்கு அதரிசனமானவர். தேவத்துவத்தின் பரிபூரணம் அனைத்தையும் வெளிப்படுத்தியவர் குமாரன். இவர் அவருடைய தன்மையின் சொரூபம் என்று தேவ வார்த்தை அறிவிக்கிறது.'

'கிறிஸ்துவானவர் முந்தினவரும், தம்மில்தாமாக இருக்கிறவருமான தேவ குமாரன். அவர் முந்தினவர் என்பதில், கிறிஸ்து கணக்கிடமுடியாத வருடங்களுக்கு முன்னரே இருக்கிறவர் என்பது புரிகிறது. அவர் தேவனுக்குச் சமமானவராக, முடிவில்லாதவராக, சர்வ வல்லவராக இருந்தார். அவர் நித்தியமாக தம்மில்தாமாக இருக்கிற குமாரன்.'

---

## கலந்துரையாடக் கேள்விகள்

**1** *இயேசுவின் நித்திய தெய்வீகதன்மைபற்றி தியானியுங்கள். இயேசு நித்திய தேவ னாகவும், சிருஷ்டிக்கப்படாதவராகவும், நித்திய காலங்களிலெல்லாம் எப்போதும் இருந்தவராகவும் இல்லாவிட்டால், இரட்சிப்பின் முழுத் திட்டமும், அவரது சிலுவை தியாகமரணமும் எவ்விதத்திலாவது அர்த்தமுடையதாக இருக்குமா? அவர் தேவன் என்பது ஏன் மிகவும் முக்கியமானது? இயேசு நித்தியரில்லை, சிருஷ்டிக் கப்பட்டவர் என்பது உண்மையாக இருக்குமானால், அதன் பின்விளைவுகள் என் னென்னவென்று வகுப்பில் கலந்தாலோசியுங்கள். அவ்வாறு சிந்திக்கும்போது எதை இழக்க நேரிடுகிறது?*

**2** *இயேசுவையும் சுவிசேஷத்தையும் இரட்சிப்பின் திட்டத்தையும்பற்றிச் சிந்திக்கும் போது, இயேசு இந்தப் பூமியில் செய்தவற்றை ஒட்டுமொத்த பிரபஞ்சமும் ஆர்வத் துடன் உற்றுநோக்கியது என்கிற கருத்தை ஏன் நினைவில் வைத்திருக்கவேண்டும்? தங்களது சிருஷ்டிகர், நித்திய சிருஷ்டிகர் சிலுவையின்மீது தொங்கியதைக் கண்ட போது, அவர்களது சிந்தையில் என்ன ஓடியிருக்கும்? அதை எண்ணி நாம் வேண்டு மானால் பிரமிக்கலாம், ஆனால் விழுந்துபோகாத பிரபஞ்சத்தினர் அவரது நித்திய மகிமையில் அவரைக் கண்டிருந்தவர்கள் என்பதை மனதில் வையுங்கள். பர லோகத்தில் தாங்கள் தொழுதுகொண்ட தேவனே சிலுவைமீது மரித்ததைக் கண்ட போது, அவர்களது சிந்தையில் என்ன ஓடியிருக்கவேண்டும்?*

**3** *பிதாவும் குமாரனும் நித்தியகாலமும் ஒன்றாகவே இருந்தவர்கள் என்பதை நம்பாத ஒருவருக்கு என்ன சொல்வீர்கள்? இது ஏன் ஒரு முக்கியமான சத்தியம்?*

# விசுவாசத்திற்காக இரண்டு வேலைகளை இழத்தல்

ரெனேவை மீன்பிடிக்க அழைத்துச் சென்று, அவரை மீண்டும் விசுவாசத்திற்குள் கொண்டு வந்தார் ரோடல்.

ரோடல் கிறிஸ்துவின் வழிமுறையைப் பின்பற்றினார். அதாவுடன் ரெனேவுடன் நேரம் செலவிட்டார், அவரது தேவைகளைச் சந்தித்தார், அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமானார். பிறகு, ரெனே இயேசுவைப் பின்பற்றினார். ரெனே கிறிஸ்துவிடம் வந்தபிறகு, ரெனேயின் வீட்டிலேயே தான் தங்கிக்கொள்ளலாமா என்று ரோடல் கேட்டார். வாலிபரான ஒரு செவந்த்–டே அட்வென்டிஸ்ட் கிறிஸ்தவர் வீட்டில் தங்குவதை ரெனேயின் பெற்றோர் அதிகம் விரும்பவில்லை, ஆனாலும் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லை. ரெனேவை ரோடல் பள்ளிக்குச் செல்லும்படி ஊக்குவித்தார், அதன்படி ரெனே பள்ளிக்குச் சென்றார்.

"நீ படித்துப்பட்டம் பெற்றதும், உன்னை மணிலாவுக்கு அழைத்துச் சென்று, 1000 ஊழியர் இயக்கத்தில் சேர்த்துவிடுகிறேன்" என்று ரோடல் சொன்னார். 1000 ஊழியர் இயக்கத்தில் ரோடல் ஏற்கனவே பணியாற்றியிருந்தார்; அது, தென் ஆசிய–பசிஃபிக் டிவிஷனிலுள்ள அட்வென்டிஸ்ட் சபையால் நடத்தப்படுகிற ஓர் ஊழியமாகும். ரெனேவைச் சந்திப்பதற்குமுன் ஒன்றரை வருடங்கள் அந்த இயக்கத்தில் பணியாற்றியிருந்தார்.

ரெனே படித்த சமயத்தில், ரோடல் அவருடனே இருந்து, அவருடன் சேர்ந்து வயல்களில் வேலைசெய்து, அவரது படிப்புக்கட்டணத்தைச் செலுத்த உதவினார். 23வது வயதில் ரெனே படித்துப் பட்டம்பெற்றார். ரோடல் தான் சொன்னபடியே, பிலிப்பைன்ஸின் தலைநகரான மணிலாவுக்கு அருகே ஸிலாங் எனும் இடத்திலிருந்த 1000 ஊழியர்கள் இயக்கத்தின் தலைமையகத்திற்கு ரெனேவை அழைத்துச் சென்றார்.

பிறகு ரோடலுக்கு இன்னொரு யோசனை வந்தது. ரெனே ஒரு ஊழியராவதற்குமுன் அவர் மேலும் படிக்கவேண்டும் என்று சொன்னார். ஸிலாங்கில் உள்ள அட்வென்டிஸ்ட் பல்கலைக்கழகத்தில் இருவரும் சேர்ந்தார்கள். ரெனே கணக்கர் படிப்பில் சேர்ந்தார், ரோடல் இறையியல் படிப்பில் சேர்ந்தார். ரெனே படித்து முடிப்பதற்கு ஆறு வருடங்கள் ஆயின. வீட்டில் யாரும் அவருக்கு உதவி செய்யவில்லை. அந்தச் சமயத்தில், லவ் ஜோய் என்பவரைத் திருமணம்பண்ணினார்.

படித்துமுடித்து, ஒரு நிறுவனத்தில் கணக்கராக மூன்று மாதங்கள் வேலைசெய்தார். பிறகு, வெள்ளிக்கிழமை இரவில் வேலைசெய்யாததற்காக அந்த வேலையிலிருந்து தூக்கப்பட்டார். எரேமியா 29:11ன் வாக்குறுதியை உரிமைகோரினார்: 'நீங்கள் எதிர்பார்த்திருக்கும் முடிவை உங்களுக்குக் கொடுக்கும்படிக்கு நான் உங்கள்பேரில் நினைத்திருக்கிற நினைவுகளை அறிவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவைகள் தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே.'



மாதங்கள் கடந்தன, ஒரு மருத்துவமனையில் கணக்கர் வேலை கிடைத்தது. ஆனால் அந்த மருத்துவமனையை நிர்வகித்துவந்த சபையில் ஞானஸ்நானம் பெறாவிட்டால், தான் நிரந்தர பணியாளராக மாறமுடியாது என்பதை அறிந்தார். அதனால் அந்த வேலையை ராஜிமானா செய்தார்.